# அநு பவங்களும் மானங்களும்



## கவிதை நூல்

கவிஞர் இரா.ஜெயக்குமார்

பி.ஏ, பட்டப்பின் கல்வி டிப்ளோமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநு பவங்களும் மானங்களும்

## கவிதை நூல்

கவிஞர் இரா.ஜெயக்குமார்
(பீ.ஏ, பட்டப்பின் கல்வி டிப்ளோமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அநுபவங்களும் அநுமானங்களும் |
| ஆக்கம் | : | இரா.ஜெயக்குமார்<br>(பீ.ஏ, பட்டப்பின் கல்வி டிப்ளோமா) |
| பிறப்பிடம் | : | கேணியடி, குப்பிளான் தெற்கு,<br>குப்பிளான் |
| வசிப்பிடம் | : | 68/8, சிவன் வீதி,<br>உரும்பிராய்கிழக்கு, உரும்பிராய். |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| தொ.பே.இல | : | 0772855413 |
| முதற்பதிப்பு | : | 2018 பெப்ரவரி |
| ISBN | : | 978-955-43965-4-8 |
| பக்கங்கள் | : | 96 |
| விலை | : | 300 ரூபா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் ஆசிச் செய்தி



அண்மைக்காலங்களில், எங்கள் அழகிய கிராமமான குப்பிழானில், கொஞ்சம் வித்தியாசமான இளைஞர்களென நான் இனங்கண்டவர்களில் ஒருவர் இரா.ஜெயக்குமார். ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் பணி புரியும் இரா.ஜெயக்குமார் பல்துறைகளில் பரிச்சயமும், ஆர்வமும் உள்ளவராக இருக்கின்றார்.

கல்விப் புலத்தில் மாணவர்களுக்கு பயன் தரும் விதத்தில் பல நூல்களை அவர் வெளியிட்டு வருகின்றார். பொது அறிவு தொடர்பாக பல விடயங்களையும் ஒன்று திரட்டி அவர் வருடாவருடம் வெளியிட்டு வந்த 'பொது அறிவு' நூல்களை நான் பார்த்திருக்கிறேன். அதனால் பயன் பெற்றிருக்கின்றேன். இப்போது இடைத்தர வகுப்பு மாணவர்களுக்கான வினாவிடை நூல்களையும் அவர் வெளியிடுகிறாரென அறிந்து மகிழ்கின்றேன்.

தன்னுடைய வாழ்வாதார பணியான கற்பித்தல் பணிக்கு அப்பால் ஊடகத் துறையிலும் மிக ஈடுபாடுள்ளவராகவும் இருக்கிறார். இந்த வகையில் எமது கிராமத்து முக்கிய செய்திகளையும், எமது பிராந்தியங்களின் முக்கிய நிகழ்வுகளையும் பரந்துபட்ட வாசகர் கவனத்துக்கு கொண்டு வந்ததில் அவர் பெரும் பங்காற்றியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் கலை இலக்கிய விடயங்களிலும் அவர் ஈடுபாடு மிக்கவர். எனது கலையிலக்கிய ஊடாட்டங்களின் போது போது, எதிர்பாராத இடங்களில் எல்லாம் அவரைச் சந்தித்திருக்கின்றேன். எமது கிராமத்து இளைஞரொருவர் இருக்கிறாரென்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன்.

எமது பிரதேச கலையிலக்கியவாதிகளுடன் எல்லாம் அவர் தொடர்புகளைப் பேணி வருகின்றார். அவர்களும் அவரை அறிந்து வைத்திருக்கிறார்கள். சமூக கலையிலக்கிய செயற்பாடுகளிளெல்லாம் அவர் தொடர்தேர்ச்சியாக இயங்கி வருகின்றார்.

எமது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் அவரின் எழுத்துக்களை, குறிப்பாக கவிதைகளை அவ்வப்போது பார்த்திருக்கிறேன். சில வித்தியாசமான கவிதை வெளிப்பாடுகளை இனங்கண்டிருக்கின்றேன். இப்போது தனது கவிதைகளைத் தொகுத்து, ஒரு நூலாக வெளியிடுகிறா ரென்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இத்துறையில் அவர் மேன்மேலும் பிரகாசிக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**குப்பிழான் ஐ.சண்முகன்**

மாணிக்கவளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த கவிஞர்
# சு.துரைசிங்கத்தின்
# வாழ்த்துச் செய்தி



ஆசிரியத்துறைக்கு அப்பால் காட்ட விரும்புகின்ற- காட்டிக்கொள்ள நினைப்பவர்தான் அதிபர் இரா.ஜெயக்குமார் ஆவார். இவரை கடந்த பத்து ஆண்டுகளாக அறிவேன்.

பல ஊடகங்கள் வாயிலாக, தன்னை காட்டமுயலும் ஜெயக்குமார் அவர்கள் கவிதைத் துறையில் காலடி எடுத்துள்ளார். அவர்தான் யாத்துள்ள கவிதைகளை கொண்டு வந்து என்னிடம் கொடுத்து 'வாசித்துப் பாருங்கள், நூலாகவும் கொண்டுவர விருப்பம்' என்றார். உடனே அக்கவிதைகளை ஒரே மூச்சில் வாசித்து விட்டேன். வாசித்து முடித்ததும் என் உள்ளத்தே தோன்றிய சில கருத்துக்களை இவ்விடத்தில் சொல்ல வேண்டும். இலக்கியங்களை ஆக்குபவர்கள் ஆழ்ந்த அநுபவம்முடையவர்களாக இருக்க வேண்டும். சொல்பவற்றை தெளிவாகச் சொல்ல வேண்டும். முரண்படாத தன்மை வேண்டும். நல்ல பாத்திரத்தில், நல்ல பொருள் பொதிந்த உணவாகக் கொடுக்க வேண்டும். இவை தான் என் மனதில் தோன்றிய கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளே ஜெயக்குமாரின் கவிதைகளை வாசித்த பொழுது தோன்றியவையாகும். இக்கருத்துக்களை ஜெயக்குமார் அவர்களின் கவிதைகளிலும் காணலாம்.

ஆசிரியரின் ஆக்கத்திறனையும், உத்வேகத்தையும், ஆழக்கருத்துக்களையும் பார்க்குமிடத்து அனுபவ முத்திரைகள் தெரிகின்றன.

வளர்க இவருடைய எழுத்துத்துறை. வாசகர்கள் வாசித்து, வரவேற்பார்கள் என்பதில் உறுதியுடன் வாழ்த்துகிறேன்.

118, ஸ்ரேசன் ஒழுங்கை
சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்

கலாபூஷணம்
சு.துரைசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

பல முடிகள் விழுந்தால் வழுக்கை. பல அடிகள் விழுந்தால் வாழ்க்கை என்கின்றன முகநூல் வரிகள்.

அநுபவம் என்பது வழுக்கை விழுந்த பின் வாழ்க்கையில் கிடைக்கும் சீப்பு போன்றது. உலகம் என்ற பல்கலைக்கழகத்தில் வாழ்க்கை என்ற படிப்பே உந்நதமான படிப்பு. என் தவறான தேர்வுகளால் காயப்பட்ட போதெல்லாம் கசிந்தவை கவிதைகளும் தாம்... கால வெள்ளத்தில் காணாமல் ஆக்கப்பட்ட என் கவிதைகள் ஏராளம். இவ்வகையில், கிடைத்தவற்றில், ஊடகங்களில் வெளிவந்த கவிதைகளைத் தொகுத்தேன். புதிய கவிதைகளையும் புகுத்தினேன்.

எனது ஆரம்பக்கல்வியை யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் பயின்றேன். அங்கு தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர் ந.இரத்தினசிங்கம் அவர்களின் வழிகாட்டலில் 'மல்லிகை' எனும் கையெழுத்துச் சஞ்சிகையை, முதன்முதலாக, குழுவாக வெளியிட்டோம். அவரே எனது இலக்கிய முயற்சிகளுக்கு பிள்ளையார் சுழி போட்டவர். அதன்பின் தரம் 6இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இணைந்தேன். அங்கு என் ஆர்வங்களுக்கு வடிகால் அமைத்தவர் ஆசிரியர் S.S.தியாகராஜா. இவர்களை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

இந்நூலை வழமைபோல் கணினி தட்டச்சுச் செய்து தந்த எனது நண்பனும் ஆசிரியருமான திரு.சி.ரங்காதரன் (ஆசிரியர், யா/மல்லாகம் மகாவித்தியாலயம்) அவர்களுக்கும், நேர்த்தியாக அச்சிட்டு வழங்கிய இணுவில் வைரஸ் பதிப்பகத்திற்கும் எனது விசேட நன்றிகள்.

இந்நூலிற்கு வாழ்த்துரை வழங்கிய குப்பிழான் ஐ.சண்முகன், மூத்த கவிஞர் சு.துரைசிங்கம் மற்றும் நூலாசிரியர் தொடர்பான உரை வழங்கிய சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.இ.ரகுபரன் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

அனைத்திற்கும் மேலாக எனது இலக்கிய முயற்சிகளுக்கு உற்சாகம் அளித்து, வழிகாட்டி வரும், நல்ல உள்ளங்கள் அனைத்திற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

**இரா.ஜெயக்குமார்**

- நூல் ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்




ஏடெடுத்த நாள்முதலாய்
என் கல்விக் கண்ணாகி........
வைகறை மணியொலியாய்
வந்தென்னைத் துயிலெழுப்பி.....
படுக்கையில் துயிலும்வரை
பழங்கதைகள் பல சொல்லி........
வாசிக்க வழி காட்டி ............
தாய்க்குப்பின் தாயாகி....
உணவாக்கி.... உயிர்காத்து............
என்றென்றும் என்னுடன் வாழும்
என் இனிய தந்தை
சிவக்கொழுந்து இராசாவுக்கு...... !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் உள்ளே...


| இல | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | தமிழே வாழியவே | 01 |
| 2 | எந்தன் பேனா | 03 |
| 3 | அகிம்சை வழி செல்லும் தலைவன் வேண்டும் | 04 |
| 4 | நித்தமும் வேண்டும் புத்தகங்கள் | 05 |
| 5 | சுபீட்சத்தின் சூத்திரம் சிக்கனமே | 06 |
| 6 | தரமைந்து மாணவரே கலைபெருக்கி வாழியவே | 08 |
| 7 | கனவுகள் நனவுகளாக... | 11 |
| 8 | தாமதம் | 13 |
| 9 | காலமென்று மாறிடுமோ? | 15 |
| 10 | நேரமில்லை என்போர்க்கு... ! | 17 |
| 11 | பச்சை மரக்கறிப் பணமகளும் பள்ளி அதிபர் படும் பாடும் | 19 |
| 12 | தாய் மதம் போற்று | 21 |
| 13 | பொருத்து வீடு பொருந்துமோ? | 23 |
| 14 | சாரதிகளே | 25 |
| 15 | பாரை நிமிர்த்த வந்த பாரதி | 27 |
| 16 | வீதியின் விதி | 29 |
| 17 | மலையகத் தமிழருக்காக... | 31 |
| 18 | பெண்ணே நீ மாறிவிடு | 33 |
| 19 | போரின் பின் விழுமியங்கள் | 34 |
| 20 | நான் படும் பாடு | 35 |
| 21 | ஆசானுக்கு அறிவுரை | 37 |
| 22 | சாராயத்தின் சாராம்சம் ! | 39 |
| 23 | போனால் போகட்டும் போடா ! | 41 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 24 | பருவக் காய்ச்சல் | 43 |
| 25 | நிலவில்லாத வானம் | 44 |
| 26 | காலத்தை வென்ற கலாமுக்காக... ! | 45 |
| 27 | ஆசான்கள் சிலரிற்காக..... | 47 |
| 28 | நுளம்பால் குழம்பும் வாழ்வு | 48 |
| 29 | பிரியமானவளே.... | 50 |
| 30 | செம்மண்ணின் சுவடுகள் | 51 |
| 31 | மழையோ மழை | 53 |
| 32 | ஆலய வாசலில் ஒரு வேள்வி | 54 |
| 33 | கறையானின் இறையாண்மை | 55 |
| 34 | சிறையிலே சிதையும் உறவுகளே | 56 |
| 35 | விக்கினங்கள் தீர்க்க வந்த விக்கினேஸ்வரனுக்கு | 58 |
| 36 | கவலைகளின் கருத்தரிப்பு... ! | 60 |
| 37 | அரங்கம் சஞ்சிகைக்கு | 61 |
| 38 | ஓடும் மேகங்களே | 62 |
| 39 | வருகிறார் வேட்பாளர் | 63 |
| 40 | ஆஸ்பத்திரியில் ஒரு சிவராத்திரி | 65 |
| 41 | மாற்றுத் திறனாளிகளே... ! | 68 |
| 42 | தித்திக்கும் நினைவுகளே... | 69 |
| 43 | தாவரமே..... தா ! வரமே ! | 71 |
| 44 | பணமே.... உன்குணமே ! | 72 |
| 45 | உனக்கு அதற்கு நேரமில்லை | 73 |
| 46 | என் மனம் | 75 |
| 47 | தொங்கு பேருந்து | 76 |
| 48 | கழிந்த ஆண்டில் கண்டதென்ன? | 77 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 49 | நீதி தேவதையே நீயோ கேளாயோ ! | 78 |
| 50 | முடியுமெனில் விடியும் | 79 |
| 51 | பிணை வைத்த படலம் | 81 |
| 52 | கரும்பென இனிக்கும் ஊர் | 90 |
| 53 | உயிரின் உறவு | 92 |
| 54 | எம்.ஜி.ஆர் எனும் மூன்று எழுத்து | 93 |
| 55 | நானும் கவிதையும் | 95 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தமிழே வாழியவே...

சங்கம் அமைத்தே
சான்றோர் வளர்த்த
தங்கத்தமிழே வாழியவே !

மூவேந்தர்களும்
மூச்சாய் வளர்த்த
முழுமைத் தமிழே வாழியவே !

இளமை குன்றா
வளமை பெற்றே
வளரும் தமிழே வாழியவே !

வள்ளுவன் குறளால்
வானுற உயர்ந்த
தெள்ளுதமிழே வாழியவே !

கம்ப காவியம்
களித்திடத் தந்த
கன்னித்தமிழே வாழியவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பெரும் காவியம்

அழகுறத் தந்த

எம்பெரும் மொழியே வாழியவே !

செம்மொழியென்னும்

செழும்மொழியாக


நம்மொழியென்றும் வாழியவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. எந்தன் பேனா... !

தலையெழுத்துப் பிழைத்தாலும்
தலையெடுக்க வழிகாட்டும்
எந்தன் பேனா.... !



கவிதைகளை வடிப்பதற்கும்
கலைகளினைப் படைப்பதற்கும்
கடமைகளைத் துதிப்பதற்கும்
கயமைகளை மிதிப்பதற்கும்
காத்திருக்கும் எந்தன் பேனா.... !

ஏழை சிந்தும் கண்ணீர் போக்க
எழுச்சி கொள்ளும் எந்தன் பேனா !
இதயம் இழந்த சோகம் எல்லாம்
இனிதே வடிக்கும் எந்தன் பேனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அகிம்சை வழிசெல்லும் தலைவன் வேண்டும் !



போர் வடுக்கள் போர்த்திய மண்ணில்
வேர் விடுத்த விடுதலை விருட்சம்
வீறு கொண்டு விண்ணுற ஓங்க
வீர மைந்தன் விரைவில் வேண்டும் !



நாளைய மண்ணில் நந்தமிழ் தழைக்க
களைத்த மனங்கள் களிப்பினில் மூழ்க
கனவு தேசம் கண்களில் விரியக்
காட்டிச் செல்லும் தலைவன் வேண்டும் !



தீமை தடுக்கும் தீர்க்க தரிசனம்
தூய்மையே கொண்ட தாய்மை யிதயம்
பிளவுகள் போக்கிப் பிணித்து வைக்கும்
வித்தகத் தலைவன் விளங்கிட வேண்டும் !



நலிந்த மனங்களில் நம்பிக்கையொளி பாய்ச்சி
விரிந்த உலகின் விருப்பையும் பெற்று
அகிம்சை வழியில் ஆணை தொடர
தியாகத் தலைவன் விளங்கிட வேண்டும் !

(வலம்புரி - சங்குநாதம் 2017.09.24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. நித்தமும் வேண்டும் புத்தகங்கள்



சுவாசிக்கும் தோறும்
சுகம் தரும் பூக்கள் போல்
வாசிக்கும் தோறும்
வளமூட்டும் புத்தகங்கள் !



உலகைப் குளிர்விக்கும்
உந்நத மேகம் போல்
உந்தன் தேகத்தில்
உணர்வூட்டும் புத்தகங்கள் !

நேற்றைய மனிதர்கள்
நெறி நின்ற விதங்காண
ஊற்றென உவந்தளிக்கும்
போற்றிடத் தகும் நூல்கள் !

ஆக்கினைகள் இல்லாத ஆசானாக...
மனத்தினை மிதிக்காத மனைவியுமாக....
பொறாமைத் தீ மூளாத நண்பனுமாக.....
அறாத உறவே அருமைப் புத்தகங்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சூபீட்சத்தின் சூத்திரம் சிக்கனமே !

வளமான வாழ்வு தனை
வருவாய்க்குள் காண
சிக்கனமே சீரிய நெறியாகும் !
கண்டதுமே காதல்
கடைச் சரக்குகளில் !
காசினைக் கரைக்கும் வழியாகும்

தேவைப்பட்ட தெல்லாம்
தேடிக் குவிக்காதே !
தவிர்க்க முடியாதவற்றையே
தடையின்றி வாங்கிவிடு !

பணப்பையைக் குறிவைத்து
பவனிவரும் கழுகுகளை
பக்கத்தில் சேர்க்காமல்
பணந் தன்னைக் காப்பாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான உணவுண்டால்
உரமான உடல் வாய்க்கும்
அளவோடு உடை வாங்கின்
வளவாழ்வு வாய்த்து விடும்

தினமும் செலவிற்குத்
திடமாகக் கணக்கெழுது !
சுபீட்ச வாழ்வுக்கான
சூத்திரத்தைக் கற்றுவிடு

சாவகச்சேரி ஸ்ரீ பழநி
சிக்கனக்கடனுதவிக் கூட்டுறவுச்சங்க
வெள்ளிவிழா மலர்
2017.11.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. தரமைந்து மாணவரே...... !

## கலை பெருக்கி வாழியவே.....



வேள்விக்குத் தயாரான
வெள்ளைப் புறாக்களே..... !
பெற்ற கடன் தீர்க்க.....
பெற்றோர் 'பேர்' காக்க....
ஆசிரியர் தம்மை
அவனியிலே நிலை நிறுத்த....
தரமொன்று மாணவரைத்
தாவிப் பிடித்திடவே
பள்ளிகளுக்கும் பற்றுக்கோடாக.....
வலயத்தரத்தை வளமாக்கும்
வாய்ப்பாக....
உங்களையே "தொலைத்து"
உருகும் மெழுகுகளே.... !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது பார் ! பார் ! என்று
வந்தவர்கள் எச்சரிக்க.....
நில்லாதே செல் ! செல் ! என்று
உம் வீட்டார் நச்சரிக்க.....
கடுப்புகளைச் சுமந்தபடி
கால் கடுக்க விரைகின்றீர்.... !
புத்தகச் சிலுவைகளைப்
பூமியிலே தினம் சுமந்து.....
ஓடியோடியே ஓய்வின்றிப்படித்து....
மூச்சு விடவும் நேரமின்றியே
உண்டதுபாதி ;கண்டது மீதியாய்.....
'அம்மாப் பரீட்சைக்கு' ஆயத்தமாகின்றீர்... !

எத்தனை வினாத்தாள்கள்
எழுதிக் களைத்திருப்பீர்?
எத்தனை வளவாளர்
வழிகாட்டல் வகுப்பெடுத்தார்?
வங்கியாளர்களும்
வலைவீசி வந்தாரே !
காப்புறுதிக் காரர்களும்
காத்திருந்து வந்தாரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளர்களும்
பல பணிகள் செய்தாரே !
உம் பெறுபேற்றைப் பெரிதாக்கி
புறொஜெக்டரில் புடமிட்டு
“வலயத்தார்“ வாழ்த்துவதால்
அதிபர்களும் அழுத்தத்தில்.... !
விடுமுறையெல்லாம்
தொடர்கதையாக....
விறு விறுப்பாகும் வகுப்புகளுமே !
இரவு வகுப்புகளும் – இங்கு
இரகசியமாய் தொடர்கிறதே !

பரீட்சை முடிந்ததா?
படிப்பெல்லாம் முடிந்தது !
அத்தனை பெற்றோரின்
அருங்கடமை ஒழிந்தது !
ஆட்டிப் படைத்திட்ட
ஆக்கினைகள் கழிந்தன !
வலையறுத்த பறவைகளாய் – இனி
கலை பெருக்கி வாழியவே !

*('1000 கவிஞர்கள் கவிதைகள்' நூலில்*
*2017 தை மாதம் வெளிவந்தது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. கனவுகள் நனவுகளாக.. !




மானிடம் தழைக்கும்
மா பெரும் கனவுகள்
கண்களில் ஏந்திக்
களிப் பொடு வா !

வளம் மிகு உளமொடு
களம் பல கண்டு
கரம் உரம் பெற்றே
உழைத்திட வா !



சோம்பலைக் கொளுத்திய
சொக்கத் தங்கமாய்
சுடர்மிகு அறிவொடு
சுகம் பெற வா !

தடைகளைத் தகர்க்கும்
தளரா உளமொடு
கற்பனைச் சிறகினை
விரித்திட வா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மீன் விழிகளில்
விளைந்த கனவுகள்
மண்மேல் மலர்ந்திட
மலையென வா !
துயரப் பனியைத்
தூர விலக்கி
உயரப் பறக்க
உரமொடு வா !




இதயம் இரும்பானால்
இமயமும் துரும்பாகும்
எதையும் தாங்கும்
எரிமலையாய் வா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. தாமதம் !



தொட்டில் பழக்கமாய்
தொடரும் தாமதம்
தட்டிக் கேட்கவும்
ஆளிலாத் தாமதம்
காலையில் கண்கள்
விழித்திடத் தாமதம்
கனவுகள்...... கடமைகள்
கலைந்திடக் காரணம் !

மாணவர் பள்ளிக்குத் தாமதம்
மாண்பினை இழக்கக் காரணம் !
பாடத்திட்டத்தை முடிக்கத் தாமதம்
பயிலுவோர் பரீட்சைக்குப் பாதகம் !

நிர்மாணப் பணிகளின் தாமதம்
நிதிகள் திரும்பக் காரணம் !
விழாக்கள் தொடங்கத் தாமதம்
விருந்தினர் வெறுக்கக் காரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலை மொழியத் தாமதம் - பின்
காலமெலாம் அவள் ஞாபகம் !
முடிவெடுப்பதில் தாமதம்
முடியும் வரைக்கும்
விடியாத காரணம் !



தமிழரெம் அபிமான
மதமே தாமதம் !
தரணிக் கிதனைக்
கூறவேன் தாமதம்?

# தாடி

தாடி என்றேன்
அவள் தரவில்லை
தானாக வளர்கிறது தாடி !

*(வீரகேசரி - 1995)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. காலமென்று மாறிடுமோ?

நிலத்தடி நீராலே
நிமிர்ந்த தெம் குடாநாடு !
ஆழ்கிணறு வெட்டியே
அரும்பயிர் விளைத்தநாடு
காலத்தின் கோலத்தால்
கயமைத் தலைமைகளின்
கோதாரி வேலைகளால்
கொடுமை விளைந்ததுவோ?

உரிமைக்காய்ப் போராடி
உருக்குலைந்த சமூகத்தின்
வாழ்வினையே வதம் செய்ய
வல்லவர் நினைத்தாரோ?

கிறீஸ் பூதம் சென்றதென
கிலி மறைந்த வேளையிலே
கழி வோயில் பூதமொன்று
கதி கலங்கச் செய்வதென்ன?
புற இருளைப் போக்குகின்ற
புதிய நல் மின்சாரம்
அக இருள் கொண்டவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவுக்கு உதவியதோ?
நாளைய விழுதுகளை
நம்பிஞ்சுப் பாலகரை
நஞ்சூட்டிக் கொல்லவென
வஞ்சகர் நினைத்தாரோ?

குடிதண்ணீர் கலனுக்காய்.....
தண்ணி யடிப்பவர்க்காய்.....
கண்ணீருடன் காத்திருக்கும்
கால மென்று மாறிடுமோ?

**(உதயன் - சூரியகாந்தி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. நேரமில்லை யென்போர்க்கு....... !



நேரமே வாழ்க்கையெனும்
நெருடும் உண்மையினை
ஆழ்ந்து சிந்தித்தால்
அதிகம் பயனுண்டு !



காலம் யாருக்கும்
காத்திருப்பதில்லையெனும்
கருத்தை உணர்ந்தே
களமாடு !

பாரபட்சப் படைப்பினிலே
நேரமொன்றே சமவளமாம் !
தீர நன்கு திட்டமிட்டால்
தீர்ந்து விடும் பிரச்சினைகள் !
பயனற்ற உரையாடல்
பழுதாக்கும் உன் நேரத்தை
தொலைக்காட்சிதனில் மூழ்கிவிடின்
தொலையும் உந்தன் எதிர்காலம் !
அலைபேசிகளில் அதிக உரை
அலைக்கும் உந்தன் வாழ்நாளை !
காத்திருக்கும் நேரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகளவும் மீண்டுவரா !
பேருந்து தரிப்பிடங்கள்.........
அரச நிறுவனங்கள்.....
மருத்துவ மனைகளென்று.......
விரயமுறும் நேரங்கள்....... !
பயனுள்ள உரையாடல்........
வளமான வாசிப்பு..........
தீர்க்கத் திட்டமிடல்.......
சுயஆய்வு...... மதிப்பீடு......
காத்திருக்கும் நேரத்தில்
கட்டமைக்கும் காரியங்கள் !

அவசரமும் அவசியமும் அறிந்து
பணிகளையும் மணிகளையும் பகுத்து
முதல் நாளிரவே முந்தி யோசித்து
முடித்திடுவாய் உந்தன் பணிகளினை !

நேரமில்லை யென்கின்ற
நேர்மையற்ற வார்த்தைகள்
நேற்றோடு போகட்டும் !
ஆர்வமுண்டேல் நேரமுண்டு
அர்த்த வாழ்வு பெற்றுவிடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. பச்சை மரக்கறிப் பணமகளும் பள்ளியதிபர் படும் பாடும்..... !



ஆடி தாண்டியும்
அவள் வரமாட்டாளாம் !
பல்லாண்டு காலமாய்ப்
படுத்துகிறாள் பாடு !

வாட்டசாட்டமாய் வந்தவள்தான்
நாள்கள் நகர நலியத் தொடங்கினாள்
கடந்த ஆண்டும் கடுப்பினிலிருந்தோம்
எட்டு மாதங்கள் எட்டியும் பார்த்திலாள்
நாடாளுமன்றவர் பாதம் பணிந்தும்...
கல்வி அமைச்சரின் கனிவான மொழி பெற்றும்...
கண்டோம் கன்னியை... ! ஒன்பதாம் மாதத்தில்... !
அதற்குப் பின்னாலே அவளைக் காணோமே !

உப்புக்கும் புளிக்கும் உணவாக்க விறகுக்கும்
சமையல் தொண்டருக்கும்
சரிக்கட்ட வழியின்றி.....
அதிபர் சங்கமோ ஆழ்ந்த உறக்கத்தில்..... !
நாவையே திறக்காத நல்லதிபர்களுமாய்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைவியாபாரி சந்திக்கிழுக்கின்றான்
எப்ப தருவாயென்று எட்டிப்பிடிக்கின்றான்
தப்பே செய்யாமல் தவிக்கிறோம் நாளும்.....
பச்சை மரக்கறிப் பணமகளே......
உன் பங்கய வதனம் காட்டாயோ?

(உதயன் - சூரியகாந்தி, 2015.05.31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. தாய் மதம் போற்று !



தாயிடத்திலும்
தவறுகள் நேரலாம் !
தந்தையிடத்திலும்
தரம் குறையலாம் !
தாயினை..... தந்தையை
மாற்றிட இயலுமா?
அந்நியப் பெற்றோரைத்
தழுவிடல் தகுமோ?



தாய்மொழி போலவே
தாய் மதம் போற்று
தவறுகள் போக்கிடத்
தளராது போராடு !
உன்னிரு விழிகளாய்
மதமும் மொழியும்
உவப்புடன் ஏற்று
உள்ளத்தில் போற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீபூதியும் சந்தனமும்
விளங்கட்டும் நெற்றியில் !
பாரெங்கும் பவனி வா
பண்பாட்டு உடைகளில்... !

வறுமையும் நோய்களும்
வாட்டும் வேளையிலே......
கொக்காக வந்து - உன்
கதவைத் தட்டுவார்
கருணையாலே திறப்பாயேல்.....
புனித நூலின்
புகழ் சொல்வார்
இதமாய்ப் பேசியே
மதமாற்றம் செய்வார்
விழுமிய வாழ்வின்
வேர்களையே வெட்டிடுவார் !
ஆயிர மாயிரம்
ஆண்டுகள் ஊறிய
'இந்து' வென்பதில்
பெருமை கொண்டிடு
இந்து மதத்தின்
சிறுமைகள் போக்கிடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. பொருத்துவீடு பொருந்துமோ?



முப்பதாண்டு மூண்ட யுத்தம்
முழுமை வாழ்வை மூழ்கடித்து
வாழிடங்கள் வசமிழந்து
பாழிடங்கள் ஆகின !

உழைப்பினாலே உயர்ந்தவர்கள்
இளைத்து நொந்து சாகிறார்
வீட்டுக்காய் வாக்களித்தோர்
வீடு வேண்டிக் கேட்கிறார்

பொருத்து வீடே பொருந்துமென்று
"சுவாமி" நாளும் சூளுரைக்க....... !
கட்டி வீடு காண்போமென்று
கூட்டமைப்பார் கூடிநிற்க....... !
பொறுத்திருந்து பொருமுகிறார்
பெருத்த வீடு தனையிழந்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு முட்ட மடியும் வீடு
ஆனை தொட்டால் இருக்குமோ?
மறுத்து நிற்போர் மாற்றுவழி
காண வேணும் சேர்வாரோ?

## வாழ்க்கைப் பயணம்

காலக்கடலில்
நெடும் பயணம் தொடரட்டும்
முதுமை அறிவோடு...
இளமை உழைப்போடு...
மழலை மனத்தோடு... !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சாரதிகளே...... !


பார்த்த சாரதிகளாய்
பவனி வாருங்கள் !
வீதி விதிகளினை
ஓதியுணர்ந்த பின்பே...
மோதியழிக்காமல்...
வேகக் கட்டுப்பாட்டை
வேதமெனக் கொள்ளுங்கள் !





காதிலே போனோடு
கடுகதியாய் ஓடுவது
நிர்க்கதியாய் நிறுத்துமென
நம் கதியை நோக்கீரோ?
போட்டி போட்டு ஓடியே
போட்டுடைக்காது.........
சாகசங்கள் காட்டியே
சாகடிக்காது............
நாளைய பயிர்களினை
நலமுறக் காப்பீரோ?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுப் பயணங்களில்
இதமாய் உறங்கிடுவோர்
பதமாய் இறங்கும் வரை
பரம் பொருளே நீர் தானே !



தூரப் பயணந்தன்னை
துயரப் பயண மாக்காது...
அயரா விழிகளுடன்
அரும்பணி செய்திடுவீர் !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. பாரை நிமிர்த்த வந்த பாரதி !



பைந்தமிழ்த் தேரோட்ட
பாரினிலே வந்துதித்த
நந் தமிழ்க் காவலனே !
செந்தமிழை செழுந்தமிழாய்
செதுக்கிய பாவலனே !
பெண் துயர் களையவென
மண் மிசை கொதித்தவனே !
வறுமைப் பிடியினிலும்
உரிமைக் குரல் கொடுத்தாய்
சக்தியை வேண்டியே
சித்திகள் பல பெற்றாய்
குயிலின் பாட்டினிலே
உயிரின் நிலை சொன்னாய்
இந்திய விடுதலைக்காய்
இன்சுவைக் கவிதைகளை
அள்ளித் தெளித்தாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஆத்தி சூடி தனை
புரிந்திடும் வகையளித்தாய்
அச்சமும் அறியாமையும்
அகன்றிட வென்றே
உச்சக் குரல் கொடுத்தாய்
தனியொருவன் உணவிற்காய்
தவித்திட.... கவி தொடுத்தாய்
புவியுள்ளவரை உந்தன்
புகழுடல் வாழுமையா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. வீதியின் விதி !



பொழுதெலாம் பொலித்தீனும்
பிளாஸ்ரிக்கும் வழிகின்ற
நகரங்கள் நிலைகண்டால்
நரகங்கள் தோற்கும் !

வீடுகள் முன்னால்
மங்கல கும்பங்களாய்
தங்கிடும் கழிவுப் பொதிகள்
தாண்ட முடியாத தடைகள் !

வானிலே வந்தும்
விரைந்து கழிவுகளை
வீதியிலே கொட்டுகின்ற
வீரர்கள் செயல்பாரீர் !



செத்த நாயையும்
செப்பமாய்ப் பொதி செய்து
நட்ட நடு வீதியிலே
விட்டகலுகின்றாரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகங்களும் நாய்களும்
காத்திருந்து குதறியபின்
மூக்கைப் பிடிக்கின்ற
நோக்கற்ற செயல் பாரீர் !



இலட்சியம் நோக்கியே
இன்னுயிர் இழந்த மண்ணில்
சுய நலச் சாக்கடையில்
சுக வாழ்வைத் துறப்பதுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. மலையகத் தமிழருக்காக..!



காலனியாட்சியிலே
கனவுகள் பல சுமந்து
காலடிகள் வைத்தவரே !
காடுகளை வெட்டியே
கழனிகள் ஆக்கினீர்
அட்டைக்கடி மத்தியிலும்
அருஞ்செல்வம் விளைவித்தீர் !

உங்கள் உதிரத்தின் நிறத்தையே
தேநீருக்குத் தந்தீர்கள்
மனங்களின் நிறத்தையே
மகிழ்ந்து கொடுத்தீர்கள்
றப்பர்ப் பாலுக்கு !
பொன்னுடலும் உரமாச்சு
மலையக மண்ணிற்காய் !

வெள்ளையன் தந்த சுதந்திரமோ
வேதனை யொன்றையே தந்தது !
போதிமாதவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனையை மறந்தவர்கள்
அந்நியராக்கி அகம் மகிழ்ந்தனர்
உழைத்துக் காய்த்த கரங்கள்
உவந்து வாக்கினையே
அளித்திடவும் மறுத்தனர்
லயம்கள் என்னும் கூடுகளுக்குள்
அடைப்பதிலே பெருமை கொண்டனர்



சுயநல அரசுகளின்
சுக நல ஒப்பந்தங்களால்
உறவுகள் அறுபட
உணர்வுகள் சிதைந்தன

வன்முறைகள் பல கண்டும்
வளம் குன்றா மனம் கொண்டீர்
கல்வி யெனும் ஒளியாலே
காலமெலாம் வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. பெண்ணே நீ மாறிவிடு

பெருமைதனில் உயர்ந்திட்ட
"பெண்" ணென்னும் பெருவிளக்கே
அடுக்களை வாழ்க்கையை மாற்று
புது யுகமே என்றும் நோக்கு !

பூவென்று சொல்வார் – உனைப்
பூஜைப் பொருள் என்பார்
பூவே நீயிங்கு பூகம்பமாய் மாறிவிடு
புல்லர்கள் புதையட்டும்

நிலவென்று சொல்வார் – உனை
நெருங்கிடவும் முனைவர்
நிலவே நீயிங்கு நெருப்பாக மாறிவிடு
நீசர்கள் எரியட்டும் !

மலரென்று சொல்வார் – உனை
முகர்ந்திடவும் முனைவார்
மலரே நீயிங்கு முள்ளாக மாறிவிடு
மூர்க்கர்கள் மிரளட்டும்

கன்னிகளே நீங்கள்
கண்ணிகள் ஆகுங்கள்
கயமைகள் கழியட்டும்

**(மாற்றம் சஞ்சிகை, 1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. போரின் பின் விழுமியங்கள்

போராண்ட பூமி தனில்
போகாத வடுக்களினால்
போகின்ற விழுமியங்கள்
வேகின்ற மேன்மக்கள்

வழிகாட்டலில்லா விவாகரத்துகளும்
வண்டாகும் ஆண்களின் பலதார மணங்களும்
பிள்ளைகளுக்கும் பாதுகாப்பின்றி
பிரிவுகள் தொடரும் ! பிறழ்வுகள் நிகழும்!!

கள்ளச் சாராயம் காசினைக் கரைக்கும்
காணாமல் ஒழித்த கேள்விகள் தொடரும்
ஆக்கிரமிப்பால் அன்னைமண் சிதையும்
வேலையற்றவர் வேள்விகள் தொடரும்
மீனவர் வளங்கள் மீறிக் கைம்மாறும்
வாக்குறுதிகள் மட்டும் வாழ்வினை வழங்கும் !

தொல்லைகள் கண்ட முல்லை மண்ணில்
தொடரும் சோகம் தடுத்திட வேண்டும்
நாளைய சந்ததி நலமே வாழ
வேளைக்கே வேலைகள் செய்திட வேண்டும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. நான் படும் பாடு !

எண்ணமெலாம் பணமான
புண்ணியவானே !
ஒன்றுனக்குப் போதவில்லை
இன்னொன்றையும் இணைத்தாய்
வாழ்க்கைத் துணையாக...... !

பிள்ளைகள் பல பெற்றாய்
பிரியமுற வளர்க்க மட்டும்
உரியவழி மறந்தாய் !
கன வழியால் பணம் சேர்த்தாய்

உன்வீட்டுப் பிள்ளைக்கோ
உணவு தர மறந்தாய் !
சீருடை வழங்கிடவும்
சிந்தை இரங்கிடாய்
தலையிலே எண்ணையினைத்
தடவிடவும் மறந்தாய் !
பள்ளிக்கு முழுக்குப்
போட்டதுவும் அறிந்திராய் !
பெற்றோர் கூட்டமென்று
பெரிதாக அழைத்தாலும்
'உற்ற' குணத்தாலே வந்திடாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனே ! அதிப்ராய் ஆக......
நப்பாசை கொண்டதனால்
நான் படும் பாடோ
நாய் படாப் பாடாச்சு !

## உறவு

மனவறையில் பிறக்கின்ற
உறவுகளெல்லாம்
மனவறையில் அமர்வதில்லை

(மாற்றம் சஞ்சிகை - 1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. ஆசானுக்கு அறிவுரை

ஆணொன்று வேண்டுமென்று
ஆசையுடன் கேட்டதற்கு
வன்னியிலே பணிமுடித்து
வந்த நல்லாசானே.... !

வந்த புதிதிலே
வாஞ்சையுடன் கற்பித்தாய் !
நாட்கள் நகர்வையிலே - உன்
நடையும் மாறியது

தாமதமாய் பள்ளி வந்தாய் !
வேண்டுமென்றே வருவதாய்
வேதனையும் தந்தாய் !
விண்ணப்பம் தராமலே
விடுமுறைகள் பல பெற்றாய் !
மாணவர் கொப்பிகளில்
மாபெரும் பிழைகளினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வைத்துப் பாராமல்
பெரிதாகச் சரிபோட்டாய் !
புலமைப் பரிசில்
விண்ணப்பத்தையும்
நிரப்பி அனுப்பி வைக்க
நீயோ மனம் வைக்கவில்லை

பரீட்சை நெருங்குதென
பெற்றோர் பரிதவிக்க
உற்ற ஆசான் நீ
உன் மாணவரை மறந்து விட்டாய் !

பெற்றோர் வரிப்பணத்தில்
பெறுகின்ற சம்பளத்தை
கற்றவனே ! ஏன் மறந்தாயோ?
கண்ணியமாகவே பணிவாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சாராயத்தின் சாராம்சம் !




சாராயம் சற்றே
உள்ளே இறங்கிவிட்டால்
ஆராயும் புத்தி கெடும் !
அறிவெல்லாம் வெளியேறும்
ஆடை நழுவினாலும்
ஆனந்தம் பெருகிவரும் !
மழலை மொழியெல்லாம்
வழமைக்கு மாறிவரும் !



அகப்பையால் அடித்தாலும்
அணுவளவும் வலிக்காது !
உலக்கையால் போட்டாலும்
உள்ளம் கலங்காது !
உள்ளத்தினுள்ளே
உறைந்து கிடப்பதெல்லாம்
காட்டாற்று வெள்ளமாய்க்
காட்டமுறக் சீறி வரும் !



விண்வெளியில் நடப்பது போல்
விந்தை உணர்வு வரும் !
மண்ணிலே உள்ளதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலாய்த் தெரியவரும் !
அப்பாவார்? அங்கிள் ஆர்?
பிரித்தறிய முடியாது - எனினும்
சாராயம் கொடுத்தே தான்
பூராயம் அறிய வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. போனால் போகட்டும் போடா !



விலைவாசி யேறினும்
விலைபேசி வாங்கிடு தோழா !
மின்னல் முழக்கத்தில்
உலைபேசி யாகிடினும் போடா !

முகநூல் முடிச்சுகளால்
முறைகேடு நேர்ந்து...
கறைபட்டவர் கதை கண்டும்
அகமெலாம் போனையே
அழைப்பதேன் தோழா?



கற்பித்தல் விற்பன்னர்
கடமையிலும் போனே !
உயர்தரம் பயிலுவோர்
பைகளிலும் போனே !
சாமிக்குத் தீபம் சார்த்துகையிலும்
காதுக்குள் ஓதும் போனே !
எமதர்ம ஏவலராம் - சாரதிகளின்
சாகசக் கரங்களிலும் போனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லற்ற பழுத்த தலைகளும் கூடப்
பற்றி நிற்பதும் போனே !

சூழல் மறந்து
சுற்றம் துறந்து
பற்றியிருப்பதும் போனே !
"தனிமை" தருவதும் போனே
அளவோடு "போனால்" அமுதம் விளையும்
அரிய பணமும் நாளும் நிறையும்

(உதயன் - சூரியகாந்தி 2017.01.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. பருவக் காய்ச்சல்

கலையென்னும் வலைவீசி
கவர்ச்சி தரும் சிலையே !
அலைபாயும் மன மெங்கும்
அழைக்குதடி உனையே !

அமுதூறும் விழி கொண்ட
குமுத மலரே வா !
புனித மது புகுந்துண்ண
புதிய வரம் நீ தா !

பழரசப் பாவையுன்
பலரகப் பார்வைகள்
மின்னலாய்த் தாக்குதடி
கன்னலே நீவா !

கொஞ்சுமொழி கேட்கமனம்
கெஞ்சுதடி நாளும்
தஞ்சமென வருவேன் – இன்னும்
புன்னகையோ எஞ்சும்?

**1989**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௨௫. நிலவில்லாத வானும்... !

நீ யில்லாத நான்..... !
கனவுகளைக் கருத்தரித்த காலம்
பசுமனதில் பதிந்த முகம்
குழந்தைகளாய் குதூகலித்த கோலம்
குடும்பங்கள் பிரிந்திட்ட சோகம் !



கல்விக் களந்தனிலே
பழரசப் பார்வையினால்
பல கதை பேசினாய் !
விழி மொழியைக் கவிவடிவாய்
கழதங்களாய் வரைந்தேன்

காலத்தின் கோலத்தால்
இடிமேல் இடி இடிக்க...
மின்னல் வெட்டியடிக்க...
மழையாய் பொழிகிறது
என் கண்களின் வெள்ளம் !

(தினக்குரல் வாரமலர் – 1995.09.27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. காலத்தை வென்ற கலாமுக்காக...... !



தந்தையர் நாட்டின் தந்தையென
விந்தைகள் புரிந்த விஞ்ஞானியே !
படகோட்டி மகனாய்
பாதம் பதித்தாலும்
கல்வித் துடுப்பைக் கவனமாய்ப்பற்றியதால்
ஏணி வைத்தும் எட்ட முடியாத
ஏவுகணை மானிடனே... !
பள்ளிப் பருவத்தில்
வறுமையையே கவசமாக்கி
புத்தகப் பொதியுடனே
புளியங் கொட்டைகளையும் சுமந்தாய் !
படிக்கும் பருவத்தில்
பத்திரிகை விற்ற
பத்தரை மாற்றுத் தங்கமே.... !
உறங்காத விழிகளினால் உயர்ந்த
கனவுகளின் நாயகனே !
குடியரசுத் தலைவரான
முடிசூடா மன்னவனே.... !
குழந்தைகளை நாடியே
குதூகலம் கண்டவரே !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மனங்களிலே
கனவுகளை விதைத்தவரே !
அக்கினிச் சிறகுகளால்
அவனியிலேசிறகடித்து
தொலைநோக்கு இந்தியாவை
வழிகாட்டி வைத்தவரே !
உயரத் துடிப்பவர்க்கு
உடுவாக என்றென்றும்
உள்ளத்தில் நீ ஒளிர்வாய் !



(2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. ஆசான்கள் சிலரிற்காக ....... !

சம்பள நாளின் பௌர்ணமிகளே !
வகுப்பறைகளில் மட்டும் ஏன்
வலம் வர மறுக்கின்றீர்கள்?
பிரம்புகள் தாம் உமக்குப்
பெரும் புகழ் தந்திடுமோ?
அரும்புகள் தம்மை - ஏன்
கசக்கிப் பிழிகின்றீர்?


மாணவ மேகங்களின்
கண்ணீர் மழையால்தான்- உங்கள்
இதயப் பாறைக்கு ஈரம் கிடைக்கிறதோ?
அன்பு வழிதனிலே அறிவைப்புகட்டிடுவீர்
காணாப் பெருமையெல்லாம் - அதனால்
கண்டு மகிழ்ந்திடலாம்

(1995ஆம் ஆண்டு விளக்கு சஞ்சிகையில்
வெளிவந்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. நுளம்பால் குழம்பும் வாழ்வு !



மரணங்கள் மலிந்த மண்ணில்
மழைக்காலம் வந்தது
நுளம்புகளின் "நல்லாட்சி"
நூதனமாய் நுழைந்தது !

ஊசிகளாய் உடம்பெல்லாம்....
உயிரெல்லாம் உள்ளுறிஞ்ச...
வேப்பமிலை யெரித்தும்
வேகத்திரி யெரித்தும்
"சீன" எசமானின் நுளம்புத்துடுப்பெடுத்து
சீற்றமொடு மின்தாக்குதல் தொடுத்தும்
பின்னால் கடிக்கும் நுளம்புகளே !

"டெங்கு" வருமென்று "டொக்டர்"
முன்மொழிய....
சுகாதார அலுவலரும் சுற்றிச்சுற்றிவர....
வருமான அரசாங்கம் வகுத்த சட்டங்கள்
வந்தெம்மைத் துயிலெழுப்ப..... !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பற்றைகளைப் பற்ற வைத்தும்
பட்ட கடி தீர வில்லை
பாலகரைப் பலியெடுக்கும்
பாதக நோய் தன்னை
பாரெங்கும் களையெடுக்க
படைதிரண்டே பணி செய்வோம் !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. பிரியமானவளே !



நீ வெண்மையானவள் தான்...
உள்ளே தான் நஞ்சு !
என் உதடுகள் உன்னை
முத்தமிடும் வேளையில்
சிவந்தே போகிறாய்..... !
அது அன்பின் அறிகுறியல்ல
அபாய அறிவிப்பு !
நான் உன்னையே சுவாசிக்கிறேன்
நீயென் சுவாசப் பைகளையே
சுவைத்துக் கொள்கிறாய் !
உன் ஆவியை உள்ளிழுத்து
சுவைக்கும் போதெல்லாம்...
என் ஆவியை மெல்லமெல்ல
எடுத்துக் கொள்கிறாய்
ஓ ! சிகரட்டே.....
நம் விவாகரத்துக்காக
விரைந்து கொள்கிறேன்..... !







(மாற்றம் சஞ்சிகை - 1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. செம்மண்ணின் சுவடுகள்



"குப்பிழான்" என்று குன்றென நிமிர்ந்த
தப்பில்லா ஊரின் தளராத நினைவுகளை
சுவீகரித்திட்ட சுவிசிலே நின்று
கவியென வடிப்பேன்" செவிமடுப்பீரே !

விக்கினங்கள் போக்கும் விநாயகர் ஆலயங்கள்
காவல் தெய்வங்களும் காத்த செம்மண்ணில்
வித்தைகளை விதைக்கின்ற விருட்சமென விளைந்து
விக்கினேஸ்வரா வித்தியாலயமும் விளங்கியது !

வெண்பஞ்சுத் தலைகளின் கரப்பந்தாட்டமும்
கட்டிளம் காளையரின் தாச்சிமறிப்புகளும்
பள்ளிச் சிறுவரின் பட்டம் விடும் படலமும்
பாடசாலை முன்னாலே பார்த்ததொருகாலம் !

வருடந்தோறும் விளையாட்டுப் பெருவிழா !
சிவராத்திரியில் சிரிக்கவைக்கும் நாடகங்கள்
கேணியடிச் சுற்றாடல் கோலாகலமாகி
ஏணியென எம்கலைகள் வளர்த்ததனை மறப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்குருதி சிந்திய வாழ்வினிலும் – செழுங்கலைகள்
செழிப்புற இளைஞர் இலக்கிய மன்றம்
இனிய உதயமெனத் தந்தது ஒளியை
இலை மறை கனிகள் இன்சுவை தந்தன

பொன்வண்டுகளும் கீச்சிடுவான்களும்
பொக்கிசமாய் நினைத்த பிள்ளைப் பொழுதுகளை
கிறிக்கற் மட்டையுடன் கிறுக்கனாய்த் திரிந்ததனை
இனிக்கின்ற பருவத்தை இழந்து தவிக்கின்றேன்

நாளை நம்செம்மண்ணில் நலம் விசாரித்திடும்
காலம் கனிந்து வருமென்று கூறிடுவேன்
மூர்த்திகடைச் சுவையமுதாய் என் கவிதை இருந்திடுமோ?
அறுவைக் கவிமிதனை அறுசுவையாய் ஏற்பீரோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. மழையோ மழை !



இறைவனின் படைப்பில்
இது பெரும் மழை !
அளவிற்கு மிஞ்சியதால்
அமுத மழை பிழை !



ஒழுங்கான வீடெல்லாம்
ஒழுக்கான தருணமிது !
பள்ளமெலாம் வெள்ளமெனப்
பாய்ந்தோடும் பருவமிது !



வடபகுதி நெல்லெல்லாம்
முடமாகும் வேளையிது !
குடிசைகளின் சுவரிடிந்து
குமுறியழும் கோலமிது !



மரக்கறிகள் மலைபோல
மதிப்புயரும் காலமிது !
பள்ளி செல்லும் பிள்ளைகளோ
படகுவிடும் வேளையிது !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. ஆலய வாசலில் ஒரு வேள்வி

இளமழை பொழியும்

இனிய தோர் காலையிலே...

இறைவனின் சந்நிதியில்...

ஆட்களற்ற அவ்வேளை...

இவன் மட்டும் இறை வணங்கி

மீளத் திரும்புகையில்...

எங்கிருந்தோ உறுமலுடன்

உந்துருளிதனில் மூவர்... !

தலைக்கவசம் தமை மறைக்க

உறைவாள் உருவுகையில்

உயிர் பிடிக்க இவனோட

குடைப்பிடியால் கொழுவி

குப்புறவே வீழ்த்தியபின்

"சதக் சதக்" என்றே தான்

சங்கல்பம் தனை முடித்து

வந்த வழியே வந்தவர் மறைய........ !

இறைவனின் முகத்தில்


இன்னமும் கருணை.... !

(வலம்புரி - சங்குநாதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. கறையானின் இறையாண்மை



அழையா விருந்தாளியென
அறைக்குள்ளே வந்தாய்.... !
தாளான நூல்களினைத்
தூளாக்கிப் போடுகிறாய் !

தூக்கம் உனக்கிலையோ?
ஓய்வென்றால் அறியாயோ?
இது தான் உன் உழைப்போ?
இடர் போக்க வழியிலையோ?

வெல்லும் வழி தெரியவில்லை
கொல்லும் வழி புரியவில்லை
காசினையிறைத்துச் சேர்த்த அருநூல்கள்
கூசாது கூழாக்கிப் போடுகின்றாய் !

எத்தனை மருந்துகள் விசிறிவிட்டேன்?
இத்தனை வலிமைகள் எங்கு பெற்றாய்?
ஆறாத வடுக்களைத் தருவதில்தான்
ஆனந்தம் கண்டிடும் மனமுனக்கோ?

நல்ல நூல்களைத் தேர்ந்த பொக்கிசங்கள்
நாளெல்லாம் நாசம் விளைக்கின்றாய் !
இறையாண்மையோடு இடர்தரும் கறையானே
இரு கரம் தொழுகின்றேன் மறையாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. சிறையிலே சிதையும் உறவுகளே... !



நான்கு சுவர்களுக்குள்
நகரும் உம் வாழ்வு...
விடிவும் தெரியாமல்....
முடிவும் புரியாமல்....
வேட்டைகளும் வேள்விகளும்
எப்போதும் நிகழலாம்...
தப்பேதும் இன்றியே
தண்டனையும் கிடைக்கலாம் !
உயிரைப் பிடித்தபடி
உறைந்திருங்கள் !
இளமையைச் சிறைக்குள்ளே
சிதைத்தபடி... !
இன்னொரு தேர்தல் வரும் போது
இறைவனைப் பிரார்த்திப்போம் – உம்
ஆத்ம சாந்திக்காய்.... !



உத்தர விட்டவர்கள்
உலாவருகின்றார்கள் !
உணவு கொடுத்தவரும்...
இருக்க இடம் கொடுத்தவரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரொட்டி சுமந்தவரும் ஆக....
பயங்கர வாதப் பாய்ச்சலில்
பலியாகித் தவிக்கின்றீர்... !



இங்கு நீர் இருப்பது
மனிதம் மறந்த சிறையானாலும்
இறையொன்று இருப்பது உண்மையெனில்
இடர் தீரும் நாள் வருமே நம்பிடுவீர் !

**(தினக்குரல் வார மலர் – 2015.09.06)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. விக்கினங்கள் தீர்க்க வந்த விக்கினேஸ்வரனுக்கு... !



நீதி நெறி தன்னை
ஓதி யுணர்ந்துரைத்த
மாசறு மன்னவனே !
வடமாகாண சபைத்தேரை
வடம்பிடித்து இழுத்திட
வந்த நற் காவலனே !
முடிவான சட்டமும்
முழுதாகக் கற்றுணர்ந்து
எம் மொழி காத்திட
உம் விழி சோராது
உழைக்கின்ற உத்தமனே !
வேலியே பயிர்களை
மேய்கின்ற கோலத்தை
வெளியார்க்குச் சொன்னவரே
இன அழிப் பொன்று
இங்கு நடந்ததை
இயம்பிடத் துணிந்தவரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தம் வரலாற்றைத்
தனியாக ஆராய
வெளி நாட்டார் வேண்டுமென்றே
வெளிப்படையாய் மொழிந்தவரே
உண்மையை உரைப்பதனால்
சுட்டு விரல் நீட்டுவோர்
கெட்டொழிந்து போகட்டும்
வெட்டொன்று துண்டு ரெண்டாய்...
பட்டதை உரைத்துப்
பைந்தமிழர் வாழ்வை
பல்லக்கில் ஏற்றுகவே !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. கவலைகளின் கருத்தறிப்பு

கவலைகளின் கலவைகளாய்
கழிகின்ற தென் வாழ்வு
நேற்றைய தவறுப் புழுக்கள்
நெருடும் மலைப் பாம்புகளாய்
இன்றென்னை அழிப்பதென்ன?

உள்ளுணர்வை உதறி....
மனச்சான்றை மறந்து...
ஆணவமே தத்துவமாய்....
ஈகோவால் இழந்ததெவை?



அன்பான வாழ்வியலின்
அமுதங்களை இழந்து...
பகைமை நெருப்பில்
பந்தமழிந்து............
குன்றான குற்றங்கள்
சுற்றத்தை யழிக்க....
பற்றற்ற வாழ்வுதனைப்
பற்ற விழைகின்றேன்

**(2017.09.03ல் தினக்குரல் வாரமலரில் வெளிவந்தது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. அரங்கம் சஞ்சிகைக்கு.....

வாழ்க அரங்க நாயகியே
தமிழுக்கு நீதான் தாயினியே
சங்கத்தமிழென்னும் போதினிலே
நீவந்து பாய்வாய் காதினிலே

மாணவ மலர்களின் கரங்களிலே
நிறைந்திடுவாய் பெருநிலவாக
கல்விச் செல்வம் அறியார்க்கும்
காரிருளில் ஒளிக்கதிராக

கம்பன் வருவான் உன்வடிவில்
வள்ளுவனோ இனி உன்மடியில்
பாரதி எழுவான் கல்லறையில்
உனைப்படித்து இன்புற்றிருந்திடவே

(யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் - 1988 உயிரியல்துறை மாணவர்களினால் வெளியிடப்பட்ட 'அரங்கம்' சஞ்சிகைக்காக எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. ஓடும் மேகங்களே !

ஓடும் மேகங்களே !
வாடும் பயிர்களுக்கு
வாழ்வளிக்கும் வள்ளல்களே... !
வாடும் மனத்திற்கு
வசந்தத்தைக் காட்டீரோ?



கனவுகள் எல்லாமே
கானலாய்ப் போனதனால்
நினைவுகளைச் சுமந்து
நித்தமும் வாடுகின்றேன் !

பூவாய் மலர்ந்த பூவையினை
தேனாய் திரவியமாய்
நினைத்தேனே !
காலம் உறவைப் பிரித்தாலும்
காதல் உலகில் வாழுமம்மா !




ஓடிச் செல்லும் மேகங்களே !
நாடி யவளின் நலம் கண்டு
ஓடி வந்து சொல்லீரோ?
வாடி நிற்றல் போக்கீரோ?

(1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. வருகிறார் வேட்பாளர்.... !



வருகிறார் வேட்பாளர்... !
வாயெல்லாம் பற்களாய்... !
வாழ்த்துகிறோம் நாமவரை
வாழ வைக்க வேண்டுமென... !

வாக்குப் பிச்சை வாங்கும் படலம்
தேர்தல் நதியைக் கடக்கும் வரைக்கும்... !
ஆற்றைக் கடந்தால் நீ யார்? நான் யார்?
தோற்ற இனமாய் தொடரும் சோகம்.

அத்தனை பிள்ளைக்கும் அயல்நாட்டில் கல்வி !
சொத்துக்கள் பெருக்கி சொர்க்கபுரி வாழ்வு !
எல்லாம் நல்லாய் நடக்கிறதாக
எல்லா நாட்டுக்கும் பிரகடனம் செய்வார்
நல்லாட்சி வித்துக்கள் நாம் தானென்றே
நாடெங்கும் தம்பட்டம் அடித்திடமறக்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவைகளின் விழாக்கள் வினாக்களாய்

தொடர...

சிறைகள் தோறும் இளமைகள் வேக...

ஒயிலை நீரென அருந்துதல் தொடர...

வாழ்ந்த மண்ணினைக் கனவிலே காண...


மீண்டும் ஒரு தேர்தல் அறிவிப்பால்

மீண்டு வருவார் வேட்பாளர்... !

வாயெல்லாம் பற்களாய் வணங்கியபடியே

வாழ்த்திடுவோம் நாமவரை.. ! தமிழின்

பெயராலே.. !!



**[வலம்புரி – சங்குநாதம் 2017.12.30]**

# 40. ஆஸ்பத்திரியில் ஒரு சிவராத்திரி



குருதிக்கொடையின் பின்
குற்றுயிராய் வீழ்ந்ததனால்
சேலைனோடெனை வேனிலேற்றி
சேர்த்திட்டார் யாழ் மருத்துவமனையில்.....
அவசர சிகிச்சையில் ஆறு ஊசிகள்
அதன்பின்னரே வாட்டிலே வாட்டினர் !

அடுத்த படுக்கையில் "பவுடர் மன்னன்"
போதையின்றிப் பொழுதைக் கழித்திடப்
பொறுமையற்றுப் போக முயன்றனன் !
"நித்திரையூசி" யின் நிகரிலாப்பணியால்
பத்தரை மாற்றாய்ப் படுத்துறங்கினன் !
முன்னாலொருவன் முதுமையினெல்லையில்
மூக்கிலிருந்து குழாயொன்று செல்லவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமொழுகும் குழாயொன்று தொங்கவும்
வேதனையோடு வெம்பிப் புலம்பினன்
"ஐயா ! ஐயா ! கொல்ல வாறான் !
வெடிக்கப் போகுது ! வெடிக்கப்போகுது!"
போரினால் வெந்த போக்கிடமற்றவன்
படுக்கையில் எழவே தடுத் தடக்கினர் !

இன்னொரு மனிதனோ இச்சைமேலிட
கண்ட தனைத்தும் உண்டு களித்தனன்
இரண்டு மாதமாய் இருக்கின்றானாம்
கதிரையிலுறங்கியே காலம் கழிக்கின்றான்
எந்தவுணவையும் விலக்காதவனை
விலக்கியே வைத்தார் கதிரையில் தனியே !

முறிகண்டி தனிலே கச்சான் விற்கும்
மூத்த இரத்தினமும் முன்னால் நின்றான்
படுக்கை ஒன்று பற்றுவதற்காய்
பாசை புரியாத் தாதியப் பாவையரை
பலவாறு வேண்டியும் பலிகாததாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டென்று எங்கோ மின்னலடித்திட
படாரென வீழ்ந்தான் பாதையிலே !
மூச்சுப் பேச்சற்று முன்னால் கிடந்தான்
பார்த்தவர் யாவரும் பதறிடவே.......
பற்பல ஊழியர் தூக்கிடவே..........
பலித்தது 'சாகசம்' கிடைத்தது படுக்கை !

நுளம்பை மிஞ்சும் நூதன வாசையுடன்
குத்திக் குத்திக் குருதி யெடுத்தனர்
எந் நோயென்று எங்கும் தேடியும்
குழுவாய்ப் பார்த்தும்... குறிகள் பார்த்தும்...
குருதிச் சோகையைக் கண்டுபிடித்தனர்
குளிகைகள் தந்தெனை விடுவித்தனரே !

(உதயன் - சூரியகாந்தி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. மாற்றுத் திறனாளிகளே.... !



நெருடும் நேற்றைய வடுக்களினை
வருடிக் கொடுத்தே வாடாதீர் !
தோற்பதே விதியெனினும்
தோற்றுவதில் பெருமை கொள்வீர் !





விழிகளில் பழுதெனினும்
வழியுண்டு ! வாழ்வுண்டு !!
மொழிவதில் குறையெனினும்
எழுதிடத் தடைவருமோ ?

செவிகளில் குறையேனும்
செபித்திடத் தடையுண்டோ ?
கால்களில் பழுதேனும்
கால் கொளல் முறையன்றோ ?



தடைகளே சக்தியினைத்
தருகின்ற டைனமோக்கள்
உடைக்கின்ற உள்ளமுடன்
உறுதியுடன் உழைத்திடுவீர் !



ஊனத்தை வென்றிடும்
ஞானத்தைப் பெற்றிடுவீர்
சாதனைப் பசியுண்டேல்
சாவிலும் வாழ்வுண்டே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. தித்திக்கும் நினைவுகளே !



செம்மண் பூமியிலே
செதுக்கிய ஒழுங்கைகளில்
சிட்டுக் குருவிகளாய்
சிறகடித்த பொழுதுகளை... !
உருட்டிய ரயர்களினை... !
காய்த்த பலாவிலையில்
கண்டறிந்த பட்டத்தை
வாழை நார் கொண்டே
வானத்தில் செலுத்தியதை...

வாழைமடல் தடி கொண்டு
வாழவொரு வீடமைத்து
சிரட்டையொலி பெருக்கியினால்
சிறப்பான விழாக்களினை...
முதலாம் வகுப்பினிலே
உடைந்திட்ட சிலேட்டுக்காய்
மடை திறந்த வெள்ளமென
தடையின்றி அழுததனை...



மண்வீதியிலே முள்பதித்து
மறைந்திருந்து நண்பனுடன்
ஆருக்குக் குத்துமென
ஆர்வத்துடன் பார்த்ததனை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுக்குப் புல்பிடுங்க
தோட்டங்கள் தோறும்
கூட்டமாய் அலைந்ததனை...
வாசிக சாலைதனில்
வளர் கதைகள் வாசிக்க
தளர் நடைத் தாத்தாக்களுடன்
போட்டியிட்ட பொழுதுகளை...



கற்கரை விநாயனார்
வீதியுலா வருகையிலே
உறைகுளிரில் உடன்வந்து
உள்ளம் களித்ததனை...
மகோற்சவ இரவுகளில்
மறைந்து பொலிஸ் கள்வனென
இருளோடு கலந்துறைந்த
இனிய பொழுதுகளை...

பஞ்ச குருமாரின்
பழுத்த வழிகாட்டலிலே
பழஞ் சைக்கிளோட்டிடப்
பழகிய பொழுதுகளை...
பளிங்கு முகம் காணவென்றே
பார்த்திருந்த பொழுதுகளை...
திரும்பிப் பார்க்கையிலே
தித்திக்கும் நினைவுகளே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43. தாவரமே... தா ! வரமே !!



பூமித்தாயின் ஆடையாகப்
பூத்துக் குலுங்கும் மரங்களே !
தூர நோக்கற்ற துரியோதனரும்
ஈர நெஞ்சற்ற துச்சாதனரும்
களையத் துடிக்கினும் காக்கின்றீர் !
விளையும் உணவாய்த் தருகின்றீர்

மரங்கள் உமையே அஃறிணையாய்
மனிதர் மட்டம் தட்டிடினும்
உரமே யாவீர் மண்ணுக்கு
உயிரை நீத்த பின்னருமே !

பறவைகளுக்கு உறைவிடமாய்...
பிராணிகளுக்கு நிழல்குடையாய்...
குளிரையூட்டும் சோலைகளாய்...
உயிர்க்காற்றாக்கும் ஆலைகளாய்...
வானம் மழையைத் தூவிடவே
வழங்கிடுவீர் நீராவிதனை !

மரங்களே மண்ணில் வரங்களென
சிரமேல் கொண்டு தொழுதிடுவோம்
இணையத்தில் மரங்களைத் தேடாது
இனிதே காப்போம் மரங்களினை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44. பணமே ! உன் குணமே !



மூன்றெழுத்தில் மூழ்கிவரும் உலகம்
முற்றாக உறவுகளை உதறும்
காசினிலே கடவுளினைக் காணும்
காலமெலாம் காசினையே தேடும்



உண்மைகளும் ஊமைகளேயாகும்
பண முடையார் சொல்லுவதே தேறும்
காவலரும் ஏவலராய் மாறும்
காரியங்கள் காசுவழி சேரும்

நாய் தின்னாக் காசென்பார் நாளும் - பின்
நாயினும் கீழாக வாழும்
கற்றவரும் கைகட்டிப் போகும்
பற்றி வரும் வள மின்றேல் நாளும்



குணம் மட்டு முண்டானால் நன்றோ ?
பிணமாகி நிற்பானே யன்றோ ?
பணமோடு குணம் காத்து வாழும்
மனமொன்றே மகிழ்வோடு வாழும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. உனக்கு அதற்கு நேரமில்லை !




எழுத்தறிவற்ற உன் மகனை
வித்தகனாக்க விடுமுறையில்
அதிபர் தானே ஆசானாய்
வகுப்புவைத்தும் விடவில்லை !
ஏற்றியிறக்க நேரமில்லை
என்றே எளிதாய் சொல்விட்டாய்
போனெடுத்துப் பேசியுமே
போனதெந்தன் பணம்தானே !
பெற்றோருக்கான கூட்டமென
பெரிதாய்க்கடிதம் அனுப்பியுமே
சற்றும் நீயோ மசியவில்லை
நேரம் இல்லையென்றுரைத்தாய்
ஆயின் எனக்கோர் ஐயமொன்று
அதனைத் தீர்ப்பாய் இன்றிங்கு
கல்விச் சுற்றுலா தன்னில்
கலந்து கொள்ளச் சந்தர்ப்பம்
பெற்றோருக்கும் வழங்குகையில்
முந்தியே நீ பணம் செலுத்தி
ஆசனத்தைப் பதிவு செய்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணிகள் பேருந்தில்
எத்திக்கெனினும் சுற்றிடுவாய் !
மகனைப் பெற்ற மறத்தாயே
மகானாக்க மறந்தாயே !
உலகம் சுற்ற நேரமெல்லாம்
உனக்கு வந்தது எப்படியோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. என் மனம்



என்ன இழவென்று சொல்ல?
எதுவும் புரியவில்லை
மனத்தின் வழியினிலே
மதி மயங்கிச் சென்றதனால்
மறைந்தது என் மகிழ்ச்சிதான் !

உள்ளத்தில் உள்ளது என்ன?
உண்மையில் புரியவில்லை
வழி காட்டிச் செல்லவும்
வள்ளல் நெஞ்சமொன்று
வாழ்க்கையில் கிடைக்கவில்லை !

ஆணவமே தத்துவமாய்
ஆன வழி சென்றதனால்
ஆறுதலும் தேறவில்லை !

என்னையே நானறிய
எளிய வழி தேடுகிறேன்
உள்ளொளி பெருக்கிடவே
உண்மை வழி நாடுகிறேன்

(2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. தொங்கு பேருந்து



பலாலி வீதிதனில்
பல்லியாய் ஊர்ந்து வரும்
மாணவியர் பேருந்து
காணக்கொடுமையிது !

தலையணைக்குள் "பஞ்சே" போல்
தயவின்றித் திணித்து விட்டு
மூச்சுவிடவும் வழியின்றி...
முனகல் ஒலிகளுடன்......
முந்திச் செல்லும் பேருந்து பாரீர் !



"சீசன்" எடுத்தாலும்
சீரற்ற வருகையினால்
அள்ளியிறைத்தே தான்
மினிவானில் மீள்கின்றார் !

மிதிபலகை மீதொருகால்
மிதிக்க வழியின்றி இன்னொருகால்
கைபிடியில் ஒரு கையும்
கைப் பொதியில் மறுகையுமென
தொங்கு பேருந்து தனிலே
தொடர்கிறது இந்தப் பயணம்.... !

உதயன் - சூரியகாந்தி 2017.10.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. கழிந்த வருடத்தில் கண்டதென்ன?

ஆண்டொன்று கழிகையிலே
ஆண்ட பரம்பரைதான்
மீண்டெழ வழியின்றி
மாண்டு செல்லல் முறைதானோ?

வீட்டையே நேசித்தும்
வீடு வந்து சேராதோர்...
காட்டுக்குள் காடழிப்பு...
கள்ளக்குடியேற்றம்...
அரசைத் துறந்த வள்ளல்
அரசுதேடி இங்குறைய.....
பொருந்துமோ என்னாது
பொருத்து வீட்டுக்காய்
பொருதும் தலைமையெழ.....
வருந்துவது நாம் தானே !

சட்டமெனும் இருட்டறையில்
சாட்சிகளால் பயனில்லை
கயமை புரிந்தவரைக்
கைவிலங்கு பூட்டவில்லை
சமஷ்டித் தத்துவமும்
"சமாதி" நிலையாகியதே !

சிறைகளில் சீரழியும் இளமை !
காணாமல் ஆக்குவதும் கடமை !
'நல்லாட்சி' யென்னுமொரு பெருமை !
நானிலமும் வாழ்த்துமிது வழமை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. நீதி தேவதையே நீயே கேளாயோ !

இன நாயகம் விளங்கும்
சன நாயகத் திருநாட்டில்
பணநாயகத்தாலே
நீதி கெடும் மன்றுகளே !



பாராளு மன்றவரைப்
படுகொலை புரிந்தவர்க்கும்
நீதி கிடைப்பதில்லை
நீத்தவர் தமிழரெனில் !

பச்சைக் குழந்தைகளைப்
பதறக் கொன்றவரும்
இளந் தமிழ்ப் பெண்களினை
இச்சைக்(கு) கெடுத்தவரும்
ஆளு மின மாகுமெனில்
ஆணைகளும் மாறிடுமோ?
தீர்ப்புக்காய் காத்திருந்தோர்
திகைத்தலே நிலை தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50. முடியுமெனில் விடியும் !

வருந்துயர் கண்டே
வருந்திடும் மனமே
பெருந்திறன் எங்கே ?
திருந்துதல் நன்றே !

உறவுகள் இழப்பினால்
உணர்வுகள் வேகும் !
அறுந்திடா நினைவுகள்
அநுதினம் கொல்லும் !

முதுமையின் தனிமையில்
வெறுமையே சூழும்
நோய்கள் பற்றியே
பாயினில் படுத்தும்

வறுமையின் கொடுமையில்
வாழ்வெல்லாம் சோரும்
ஆருயிர் பெற்றுமே
அழிவையே நாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுண்டேல் களமுண்டு
காலத்தைப் போற்று !
உழைப்பினால் உயர்வுண்டு
உதிரத்தைப் பாய்ச்சு !

விழியென்னும் உளிகொண்டு
வித்தகனாகு !
உயிர்ப்போடு உறவாடு
உன்னரசாளு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. பிணை வைத்த படலம்



சமாதான காலத்தில்
சந்தித்தேன் அந்நியனை !
மச்சாளின் மன்னனென்றே
உச்ச உறவு சொன்னான்

வன்னியிலிருந்தே தாம்
வலிகாமம் வருவதற்கு
வீடொன்று பார்த்திடவே
வீரத் திருமகள் தான்
ஓலை யனுப்பியதை
ஓங்கி யுரைத்திட்டான் !
இனிப்புச் சோடாவும்
இங்கிதமாய்த் தந்திட்டான் !
பல்லெல்லாம் பௌர்ணமியாய்
பாசவலை வீசிவிட்டான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுடன் வந்ததற்கு
நேர்த்தியாய் ஒரு வீடு
நேரத்தே யெடுத்தாலும்
பல வழியால் சொல்லியுமே
பாச மச்சாள் வரவில்லை !

மனிதாபி மான யுத்தமது
மகோன்னதமாய் முடிகையிலே
மீண்டு வந்தான் மிடுக்குடனே
மீண்டு மொரு வீடென்று
மனைவியவள் அனுப்பியதாய்...
மணாளனும் கூறிநின்றான்

உயிர் தப்பி வந்ததற்கு
உதவுவதே கடனென்று
ஊருக்குள் ஒரு வீடு
உவப்படையக் கொடுத்திட்டேன் !

அகதியாய் வந்தவனோ
அடுத்த சில தினாங்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்ததோர் கடை தனிலே
எண்ணற்ற பொருள் குவித்தான் !
ஏழையாய்ப் போன மச்சாள்
எண்ணிலாப் பொருள் சேர்க்கும்
கண்ணான கணவனையே
கட்டியதாய் மனம் மகிழ்ந்தேன்

காலங்கள் கழிகையிலே
காத்திருந்து மீண்டும் வந்தான்
'சேர் ! சேர்' என வழிந்தான்
தேனாகவே மொழிந்தான்

சிறுதொகைப் பணம் பெறவே
சிறிய தோர் பிணையொப்பம்
வழமைபோல் வழங்குமாறு
வினயமாய் விளம்பி நின்றான்
சனிபகவான் பெயர்ச்சியினால்
சந்திக்கும் தொல்லையிது !
பிணையென்று சொல்லியெனை
பிணமாக்கப் பார்க்காதே !
துணையாக நின்றதற்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணையாக்கத் துடிக்கின்றாய் ?
என் வாழ்வைக் கெடுக்காதே
என்றகன்றேன் அவ்விடத்தை !

காய்வெட்டிச் சென்றாலும்
காணு மிட மெல்லாமே
'பிணை'யென்று பிரியமுற
எனை வேண்டி நின்றானே !

கலிபுருசன் பெயர்வாலே
கடுத்த மனம் மாறிடவே
கண்ணசைத்தேன் கரிநாளில்
கம்பனிக்கு அழைத்து வந்தான் !

கழுத்திலே பட்டியுடன் - லீசிங்
கம்பனியார் வரவேற்றார்
சிறிய தோர் கையொப்பத்தால்
சிறந்திடும் வாழ்வென்றார் !
ஆருடைய வாழ்வென்றேன்
அற்புதமாய்ப் புன்னகைத்தார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடியெல்லாம் உழைத்திடவே
'படி' யென்னும் வாகனமே
முடிவாக வேண்டுமென்றான்
'படிக்குரிய தொகை ?' என்றேன்
பதினெட்டு லட்சமென்றான்
நாற்பதாயிரம் தான்
மாதாந்தத் தொகையென்றான் !

நான் பெறும் சம்பளமே
நாற்பதுக்குக் காணாதே !
பதறி யோடிடவே
உதறி யெழுகையிலே
மூன்று நாளைக்குள்
முடித்திடுவேன் கடனென்றான் !
'படி' யொன்றைப் பிடித்தாலே
விடிவொன்று வருமென்றான்
உற்றதொரு குணத்தாலே
சற்று மன மிளகிவிட்டேன் !
சீராய்ப் பணம் செலுத்த
சிறந்த பல புத்திமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பமுறக் கூறியபின்
ஒப்பமிட்டேன் படிவத்தில் !

நாட்கள் நகர்ந்திடவே
மாதங்கள் மலர்ந்தன
நல்லதோர் நாளிலே
கடிதமும் வந்தது
கட்டுப்பணம் செலுத்தாத
கயமையினைக் கூறியது

அப்பனுக்குப் போனிலே
அறிவுரைகள் கூறினேன்
எப்பவும் போலவே
ஏதேதோ கூறினான்

இப்போ அவன் கூட
இல்லத்தில் இருப்பதில்லை
எப்பவுமே படியோடு
எங்கெங்கோ அலைகின்றான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைக்குக் குரங்கொன்று
முது நாவல் கனிகொடுத்து
உண்டான உறவாலே
முதுகிலே பயணித்த
கதையெந்தன் நிலை கண்டேன் !

தொடரும் கடிதங்களால்
கிளரும் பயத்தாலே
அடுத்தவனின் வீடு செல்ல...
மழையிலே நனைந்தும்...
வெயிலிலே காய்ந்தும்...
பாதுகாப்பற்ற 'படி' கண்டேன் !
என் கெஞ்சுமொழி கேட்பதற்கோ
நெஞ்சமில்லை யவனுக்கு... !
எப்படியாவது செலுத்தென்று
செப்படி (வித்தை) மச்சாளிடம் கேட்டேன்

என்னைக் கேட்டோ - நீர்
ஒப்பமிட்டீரென்று
போட்டாளே யொரு போடு !
இத்தரை மீதில் இனியேது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையாய் வன்னிக்குச் சென்றவளே
ஏற்றதோர் மணாளனைத் தேர்ந்ததனால்
எப்படியோ வளம் பெற்றுவிட்டாய்
உன்னுறவால் தானே உதவி செய்தேன்
உள்ள மிளகியே உதவாயோ ?

சில நாள் சிந்தை நொந்தபடி
சீமான் வீட்டு வாசலிலே
உறுதி மிக்க மனத்துடனே
உண்ணவிரதம் இருந்தேனே !
இரவு எட்டுமணியளவில்
'படி' யின் உறுமல் தனைக்கேட்டு
படியைவிட்டு எழுந்தேனே !
காசைப் பற்றி நான் கூற
தூசாய் என்னைப் பார்த்தானே !
"லீசிங் தந்த கம்பனியும் - வலை
வீசிப் பறிக்க முடியாது
என்னை எவரும் அச்சுறுத்த
எண்ணம் கொண்டால் நடக்காது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறாய்ச் சொன்னான் பதில் ஒன்று
நாராய்ப் போனேன் நான் அன்று !
ஆணவ மொழிகள் பகர்ந்திட்டான்
அழுதேன் ! அழுதேன் !! மனமெங்கும்...

நாற்பதாயிரம் மாதாந்தம்
நான் தான் கட்ட வழியேது ?
எப்படித் தப்புவதென்றேதான்
எந்தன் உறக்கம் தனையிழந்தேன்
மூளை மச்சாள் தன்னாலே
ஏழையாகிப் போனேனே !
'துணைபோனாலும் பிணைபோகாதே'
துணிந்து என்றும் கூறிடுவேன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52. கரும்பென இனிக்கும் ஊர் !




வலிகாமத்தின் வலிமை யூர்
வளங்கள் பொலியும் வள்ளலூர்
இடம் பெயர்க்கப்பட்டவரும்
அடம் பிடித்து வாழுமூர் !

கருணை பொழியும் கற்பக விநாயகர்
காளியுடனே சிவனருள் பொழிய
மூன்று கோயிலால் முழுமை பெற்றிடும்
தொன்மையைத் தொட்டு நிற்குமூர் !

நிலத்தடிவேராய் நிலைத்த இந்துவும்
கலைச்சுடர் பரப்பும் சைவத்தமிழும்
சான்றோராக்கும் சந்திரோதயமும்
வித்தகராக்கும் வித்தியாலயங்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திரிகையினால் முந்தி நின்றவூர்
விவசாயத்தில் விளங்கும் எழிலூர்
பொன் சிவகுமாரன் பொங்கிய வல்லூர்
வித்திகர் பலரும் விளையும் எம்மூர் !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 53. உயிரின் உறவு !

பள்ளிச் சுமையழுத்த...
முந்திச் செல்ல வெண்ணி...
உந்துருளி தனைத்திருப்பி...
அரைவட்டம் அடிக்கையிலே...
தரையிலே கிடந்ததனால்
ரயரிலே அரைபட்ட
அழகிய வண்ணாத்துப் பூச்சிகண்டேன் !

செத்தபின் ஏறியதோ ?
ஏறியதால் செத்ததுவோ ?
எதுவுமே புரியவில்லை !
அசைவற்றுக் கிடந்திட்ட
அழகிய பூச்சிதனை
பழகிய இன்னொன்று
இளகிய பாசத்தால்
வட்டமிடக் கண்டேன்
உயரின் உறவு கண்டேன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54. நானும் கவிதையும்

ஐந்தாம் வகுப்பு முதல்
ஐம்பது வயது வரை
அகத்தில் கசிவது கவிதையே !

உயர்தர உயிரியல் பரீட்சைகளில்
உள்ளத்தில் சுரந்ததும்
உண்மையில் கவிதையே !

அறியாமல் நேசித்து
அற்புதமாய் வடித்ததும்
அழகியல் கவிதையே !

சட்டப் பரீட்சையிலே
முட்டி வடிந்ததும்
குட்டிக் கவிதையே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் நெஞ்சினைத்
துளைத்து எடுக்கையில்
துணைக்கு அழைப்பதும் கவிதையே !

எனக்காய் இரங்கி
இறைவன் அளித்ததும்
கவலை போக்கும் கவிதையே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 55. எம்.ஜி.ஆர் எனும் மூன்று எழுத்து



அறியாப் பருவத்தில்
உன் முகராசி கண்டு
ஆசை முகமுடைய
நாயகனாய் வரித்தேன் !
நீ நாடு விட்டு
நாடோடியாய் சென்றாலும்
நல்ல நேரம் பார்க்காது
என் கடமையென்று
உழைக்கும் கரங்களினால்
உயர்ந்திட்ட ஒளிவிளக்கு !
நாளை நமதேயென்று
உரிமைக்குரல் கொடுத்து
ஆயிரத்தில் ஒருவனாய்
ஆனந்த ஜோதியாய்...
அவனியில் உயர்ந்தாய் !
பணம் படைத்தவனாய்...
நினைத்ததை முடிப்பவனாய்...
மீனவ நண்பனுமாய்...
கூண்டுக்கிளி போன்ற
அடிமைப் பெண்களின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவற் காரனுமாய்...
கலங்கரை விளக்கமுமாய்...
நீதிக்குப் பின் பாசமென
நீதிக்குத் தலை வணங்கியதால்
எங்கள் தங்கமென்றோம்
பெற்றால்தான் பிள்ளையா என்று
எங்க வீட்டுப்பிள்ளையென...
இதயக் கனியாக....
குடியிருந்த கோயிலாக...
தலைவனாய் வைத்திருந்தோம் !



திருடாதே யென்று
தீயோர்க்கு உரைத்ததனால்
அன்பே வா வென்று
குமரிக்கோட்டத்தில்
இதய வீணையில்
எத்தனைபேர் எண்ணினாரோ?
என் அண்ணனென்றும்
அண்ணா நீயென் தெய்வமென்றும்
தங்கைகள் போற்றினரே !
உலகம் சுற்றும் வாலிபனாக
நேற்று இன்று நாளையென
பல்லாண்டு வாழ்க உன் புகழே !
இன்று போல் என்றும் வாழ்க
இவ்வுலகில் உன் புகழே !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி..........

திரு. இரா. ஜெயக்குமார் குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அது, காசிவாசி செந்திநாதையர் முதலாக பல அறிஞர்களையும், இலக்கியவாதிகளையும் கண்ட ஊர். எமது நாட்டு இன முரண்பாட்டின் விளைவான உக்கிரமான போர் ஜெயக்குமாரை உரும் பிராய் வாசியாக்கி விட்டது.

ஜெயக்குமார், இயல்பாகவே கல்வி நாட்டம் உடையவர் தளரா முயற்சியாளர். அவர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியராயும் பட்டதாரியாயும் ஆகி, இன்று ஒரு பாடசாலையின் அதிபராகத் திகழ்கிறார். அவர், பாடசாலை மாணவர்கள் தமிழ்க் கல்வியில் விருத்தியுற வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கப் பாடநூல்களுக்கு அமைவான முறையில் செயல் நூல்களை ஆக்கி வெளியிட்டார். மாணவர்கள் பாடவிதானத்தோடு நின்று விடாமல் பரந்துபட்ட விடயங் களில் அறிவுபெற்று வளர வேண்டும் என்ற நோக்கில் 'இன்றைய உலகம்' என்ற பெயரில் பொது அறிவு வினாவிடை நூலை வெளியிட்டார். அந்நூல் ஒன்பதாவது பதிப் பினைக் கண்டுள்ளமை கொண்டு அதன் பயன்பாட்டுப் பரம்பலை உணர்ந்து கொள் ளலாம். ஜெயக்குமார், சிறிதுகாலம் 'கண்மணி' என்ற பெயரில் மாத சஞ்சிகை ஒன் றையும் நடத்தினார். 'இலட்சியம்! சாதனை!! வெற்றி!!!' என்பதே அப்பத்திரிகையின் குறிக்கோளாய் அமைந்தது. அதிலே ஆசிரியரின் குறிக்கோளையும் வாழ்க்கையையும் நாம் கண்டுகொள்ளலாம்.

ஜெயக்குமார் இளவயது முதலாகவே இலக்கிய நாட்டத்தோடு வளர்ந்தவர் பட்டிமண் டபப் பிரியர் அதனால் 'தமிழோசை' என்னும் பெயரில் பட்டிமண்டபக் குழு ஒன்றையும் இயக்கி வருகிறார். ஜெயக்குமாரின் இலக்கிய இதயம் கவிதைத் துறையையும் நாடியுள்ளது. யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளில் அவ்வப்போது அவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. அண்மையில் வெளிவந்த '1000 கவிஞர்கள் கவிதைகள்' என்ற தொகுதியில் தனது கவிதை இடம்பெற்றதால் 'ஆயிரத்தில் ஒருவன்' என்று பெருமிதம் உறுகிறார்.

'மேகதூதன்' என்பது ஜெயக்குமாரின் புனைபெயர். அப்பெயர், சமஸ்கிருத மஹாகவியான காளிதாஸனைச் சுட்டவல்லது. கவிதை தொடர்பான ஜெயக்குமாரின் இலட்சியம் அவ்வளவு உயரத்தில் இருப்பது மகிழ்ச்சிக்கு உரியது. இலட்சியத்தை அடைவதற்குச் சாதகம் - சாதனை செய்தல் வேண்டும். சாதகம் செய்வதால் வெற்றி எய்தலாம். சாதனை செய்ய வாழ்த்துகிறேன்!

'இலட்சியம்! சாதனை!! வெற்றி!!!'

க. இரகுபரன்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

ISBN 978-955-43965-4-8
9 789554 396548

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org